பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 20 சனிக்கிழமை (03.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 70

## சுதந்திர தின நிகழ்வுகளை ஒட்டி

# கொழும்பில் தீவிர பாதுகாப்பு

## முப்படையினரும் பொலிஸாரும் குவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 03

**நாட்டின் 59ஆவது சுதந்திரதினம் நாளை இடம்பெறுவதையொட்டி தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. வெளிமாவட்டங்களில் இருந்து பல்லாயிரக் கணக்கில் பொலிஸாரும், முப்படையினரும் தருவிக்கப்பட்டு தலைநகரில் குவிக்கப்பட்டுள்ளனர்.**

தலைநகர் உச்சப்பாதுகாப்பு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும், வெளிமாவட்டங்களில் இருந்து தருவிக்கப்பட்ட பொலிஸாரும் துருப்பினரும் தலைநகர வீதிகளில் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

தலைநகரில் முக்கிய பிரமுகர்களின் இல்லங்கள் மற்றும் கேந்திர மையங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு முன்னேற்பாடு கருதி முக்கிய பிரமுகர்கள், மூத்த அரசியல்வாதிகள், பாதுகாப்பு அதிகாரிகள் போன்றோரின் நடமாட்டங்களைக் குறைத்து, அவர்களின் பந்தோபஸ்தில் அதிக சிரத்தை காட்டுமாறு சம்பந்தப்பட்டோர் கேட்கப்பட்டுள்ளனர்.

தலைநகருக்கு வரும் சகல வாகனங்கள் குறித்தும் கண்ணாக இருக்கும்படி படையினர் கேட்கப்பட்டிருக்கின்றார்கள்.

தரை வழியாக மட்டுமல்லாமல் கடல் மற்றும் வான் வழியாக நேரக்கூடிய ஆபத்துகளையும் எதிர்கொள்ளத்தக்கதான முன்னேற்பாடுகளிலும் பாதுகாப்பு வட்டாரங்கள் கவனம் எடுத்திருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

**சவால்களை எதிர்கொள்ளத் தயார்**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலானசமாதானமுயற்சிகள் தோல்வியுற்று இருதரப்பு உறவில் பெரும் விரோதம் உருவாகியிருக்கும் இந்தச் சூழலில், சுதந்திரதின வேளையில் நாட்டுக்கு நேரக்கூடிய அனைத்து பயங்கரவாத அச்சுறுத்தல்

(06ஆம் பக்கம் பார்க்க)

## இந்தப் பிரதேசங்களில் இன்று மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.3

அவசர பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 4 மணி வரை குடாநாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று பிரதேச மின் பொறியியலாளர் வி.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் -

இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாண நகரம் மற்றும் யாழ். பட்டினப்பகுதி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், பொற்பதி, சங்குவேலி -

சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை ஆகிய இடங்களிலேயே மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் பராமரிப்பு வேலை முடிவுற்றால் முன்னதாக மின்சாரம் விநியோகிக்கப்படும் என்றும் மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-202)

## மனித உரிமை ஆணைக்குழு சட்ட ஆலோசகர் நேற்று நகரில் சிப்பாய் ஒருவரால் தாக்கப்பட்டார்

### படை உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.3

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் சட்ட ஆலோசகர் ஆர்.றெமேடியஸ், நேற்று நண்பகல் சுமார் 12.20 மணியளவில் யாழ். ஸ்ரான்லி வீதியில் வைத்துத் தாம் படைச் சிப்பாய் ஒருவரால் தாக்கப்பட்டதாக படை உயர் அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளார்.

ஸ்ரான்லி வீதியில் இருந்து யாழ். நகர பஸ் நிலையத்துக்குச் செல்லும் வீதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வங்கிக்குச் செல்ல முயன்றபோது, அங்கு பணியில் இருந்த சிப்பாய் ஒருவர் திடீரெனத் தன்னைத் தாக்கியதாகவும் -

அவருடன் பின்னர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும் றெமேடியஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக படை உயர் அதிகாரிகளுக்கு முறையிட்டதன் பேரில், உயர் படை அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் தமது அலுவலகத்துக்கு வருகை தந்ததாவும் -

சம்பவத்தையிட்டு படை அதிகாரிகள் தமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட சிப்பாய்க்கு எதிராக இராணுவ சட்டம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் வாக்குறுதி அளித்ததாகவும் வழக்கறிஞர் றெமேடியஸ் மேலும் தெரிவித்தார். (அ-1-4-8)

## ஆஸ்திரேலிய பிரதிநிதிகள் இலங்கை வருவர்

கொழும்பு, பெப்.3

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்த ஆய்வுக்கென ஆஸ்திரேலிய அரசின் இரண்டு பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளனர்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் ரோன்சென்டல், செனற்சபையின் உறுப்பினர் ஸ்டிப் ஹவிவ் ஆகிய இருவருமே இலங்கை வரவுள்ளனர்.

இவர்கள் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதர் கே.பாலபட்ட பெண்டியின் அழைப்பின் பேரில் இங்கு வருகை தரவுள்ளனர். (ஐ)

## ஈழத்தமிழ் அகதிகள் தனுஷ்கோடி சென்றனர்

இராமநாதபுரம், பெப் 3

இலங்கையிலிருந்து 39 ஈழத்தமிழ் அகதிகள் வியாழக்கிழமை அதிகாலை தமிழகக் கடற்பகுதியான தனுஷ்கோடியை சென்றடைந்தனர்.

மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 17 ஆண்கள், 16 பெண்கள், 6 குழந்தைகள் என 14 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேர் தமிழகம் வந்துசேர்ந்தனர்.

இவர்களிடம் தனுஷ்கோடி பொலிஸார் விசாரணைகளை நடத்திய பின்னர் மண்டபம் அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைத்தனர் எனத் தெரியவந்தது.

இவர்கள் ஒவ்வொருவரும் படகுக் கட்டணமாக 5 ஆயிரம் ரூபா முதல் 7 ஆயிரம் ரூபாவரை படகோட்டிக்குச் செலுத்தினர் என விசாரணையிலிருந்து தெரியவந்ததாகப் பொலிஸார் கூறினர்.

## சமஷ்டித் தீர்வை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதிக்கு லிபறல் கட்சி ஆலோசனை

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வை ஏற்றுக் கொள்ளுமாறு லிபறல் கட்சி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கான முழுமையான தகவலைக் கொண்ட யோசனையை ஜனாதிபதியிடம் அந்தக் கட்சி முன்வைத்துள்ளது.

கட்சியின் யோசனைப்படி அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்கப்படும் வகையில் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்கள் இணைக்கப்பட்டு அது உடறட்ட அல்லது மலையகம் என்ற பெயரில் அழைக்கப்படவேண்டும்.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனறாகலை என்பன இணைக்கப்பட்டு அது றுகுணு தேசம் என அழைக்கப்படவேண்டும்.

குருநாகல், பொலநறுவை, அநு ராதபுரம் ஆகியன இணைக்கப்பட்டு அது றயரட்ட தேசம் என அழைக்கப்படவேண்டும்.

இதற்காக இனவீதம், வாழ்க்கை முறை,

(06ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலைக்கழகச் சூழலில் மேலதிக படையினர் குவிப்பு

மட்டக்களப்பு, பெப். 03

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தையடுத்து கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகம் அமைந்துள்ள பிரதேசத்தைச் சூழ்ந்து மேலதிக இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

அச்சம் காரணமாக கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்கள் எவரும் நேற்று பல்கலைக் கழகத்துக்கு சமுகமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் எவையும் நேற்று இடம்பெறவில்லை என்றும் அறியவந்தது.

இதேவேளை, கிளைமோர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தையடுத்தது மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது கைது செய்யப்பட்ட 14பேர் தொடர்ந்

(06ஆம் பக்கம் பார்க்க)

### அதிகாரப் பகிர்வு விவகாரம்

# எந்த யோசனை புலிகளுக்குச் சமர்ப்பித்தாலும் ஜே. வி. பி. மிகக் கடுமையாக எதிர்த்தே தீரும்!

கொழும்பு, பெப்.3

அதிகாரப் பகிர்வு யோசனை எதனையும், எந்த வடிவத்திலேனும் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசனை செய்யுமாயின், அதனை எதிர்ப்பதற்கான சகல விதமான நடவடிக்கைகளிலும் ஜே.வி.பி. தீவிரமாக இறங்கும் - எல்லாக் கட்டங்களிலும் அதனை எதிர்த்தே தீரும்.

- இவ்வாறு ஜே.வி.பி. வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு மீண்டும் இம்மாத மத்தியில் கூடவுள்ளது. அது குறித்துக் கருத்து வெளியிட்டபோதே ஜே.வி.பியினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு இம்மாத மத்தியில் மீண்டும் கூடும் என்று அதன் தலைவரான விஞ்ஞான தொழில் நுட்பத் துறை அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறினார். இம்முறை அதிகாரப் பகிர்வு குறித்து விரிவாக ஆராயப்படும் என்றும் அவர் கூறினார்.

அமைச்சர் விதாரண சமர்ப்பித்த யோசனை ஏனைய கட்சிகள் சமர்ப்பித்த யோசனைகள் என்பன மிக நுணுக்கமாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி தனது யோசனையை ஏற்கனவே சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குச் சமர்ப்பித்து விட்டது. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் சமர்ப்பித்த யோசனைகள் கொண்ட அறிக்கையைப் பரிசீலனை செய்வதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு குழுவை நியமித்திருந்தது. அந்தக் குழுவின் கருத்துக்கள் அடங்கிய சிபார்சுகளும் இம்மாத மத்தியில் மீண்டும் ஆரம்பமாகும் கூட்டத் தொடரில் ஆராயப்படும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் இருந்து ஜே.வி.பி. விலகியது தெரிந்ததே. (அ)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆவது திருமண ஆண்டு நிறைவு



இன்று (03.02.2007)
சனிக்கிழமை இனிய
இல்லறத்தில் இணைந்து
வெள்ளிவிழாக்காணும்

**சேவியர் சாந்தி**

தம்பதியருக்கு மனம்
நிறைந்த வாழ்த்துகள்
அன்னையாய் தந்தையாய்
அன்புக்கோர் உடன்பிறப்பாய்
ஆதரவுத் திருவுருவாய்
எங்களுயிர் வளர்த்தெடுத்த
அன்னையும் தந்தையும்
இனிய இல்லறத்தில்
ஈருடலும் ஒருயிராய்
நூறாண்டு வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.
வாழிய! வாழியவே!!

சேவியர் சாந்தி

என்றும் அன்புடன்,
**பிள்ளைகள்.**
425, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 222 9363
(577659)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## விசேட அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் தற்போது ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தின் நேரடி மேற்பார்வையில், ஆலய நிறைவேற்று அலுவலர் அவர்களாலும் கணக்காளர் அவர்களாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாலயத்தின் பெயரால் சிலர் பணம் வசூலித்து வருவதாகவும், பொருள்கள் சேகரித்து வருவதாகவும் எமக்குத் தெரியவந்துள்ளது.

இவ்வாலயத்தின் பெயரால் நிதி வசூல் செய்வதற்கோ, பொருள்கள் சேகரிப்பதற்கோ, எந்தவொரு நபருக்கும் ஆலய நிர்வாகம் அனுமதியளிக்கவில்லை என்பதையும் அவ்வாறு பணமோ, பொருள்களோ வசூலிக்கும் வழமை எதுவும் இவ் வாலயத்தின் பெயரால் ஒரு போதும் நடைபெறுவதில்லை என்பதையும் அம்பிகை அடியார்களின் கவனத்திற்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றோம்.

இவ்விடயத்தில் மிகவும் தெளிவாக இருக்குமாறும் எச்சந்தர்ப்பத்திலும் போலி வேடதாரிகளால் ஏமாற்றப்படுவதற்கு இடமளிக்க வேண்டாம் எனவும் அன்பர்கள் அனைவரையும் மேற்படி ஆலயத்தின் சார்பில் பணிவன்புடன் வேண்டிநிற்கின்றோம். ஆலய விடயங்கள் தொடர்பாக ஏதாவது விவரங்கள் தேவைப்படின் 0602213024 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு போதிய விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

(சி-51958)

*நன்றியுடன் அன்னையின் பணியில்.*

செ.சுதர்சன்
கணக்காளர்.

நா.யோகநாதன்
நிறைவேற்று அலுவலர்

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

# Thank you all

We, Mr. & Mrs. L.S.Dushyanthan give a big thank you to the Professors, Doctors, Pastors, Principals, Staff of the University of Jaffna, Staff of the Green Mamorial Hospital, Staff of Jaipur Centre, Patients, Relatives, Neighbours, Friends and Well-Wishers, who attended our wedding reception on the 28th ultimo, who expressed their good wishes over the telephone etc. We will remember your blessings and wishes always.

**Mr. & Mrs. L.S.Dushyanthan.**

(57720)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## மண் வழங்கல்

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கிறேசர் தூசி, செம்மண், வயல்மண் போன்றவை தேவைப்படுகின்றன.*

*மேற்படி மண்வகைகள் பின்வரும் இடங்களில் வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.*

1. பிரதான வளாகம், திருநெல்வேலி
2. மருத்துவபீடம், கொக்குவில்
3. சித்தமருத்துவப் பிரிவு, கைதடி
4. இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம்

*மேற்குறித்த மூன்றுவகை மண்வகைகளை வழங்க விரும்புபவர்கள் அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு டிராக்டர் லோட்டை மேற்குறிப்பிட்ட இடங்கள் ஒவ்வொன்றிலும் வழங்குவதற்கான தங்களது கூறுவிலைகளை எதிர்வரும் 07.02.2007இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். ஒவ்வொரு வகையிலும் குறைந்தது 25 லோட் வரை தேவைப்படும்.*

*கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "மண் வழங்கல்" எனக் குறிப்பிடவும்.*

பதிவாளர்
2007.02.02

(சி/51791)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
சி.சிவகுமாரனின் தாய்

**சின்னத்துரை தங்கம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(57733)

## பிரதேச செயலகம் இடம்மாற்றம்

குடத்தனை.பெப்.3

பருத்தித்துறை பிரதேச செயலகம் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மருதடிப் பகுதியில் இயங்கிவந்த இப் பிரதேச செயலகம் தற்பொழுது பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் அமைந்துள்ள வீடொன்றுக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(1-78)

## தவறிவிட்டது

காராளசிங்கம் சுரேன் என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய பைல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0779672613 அல்லது 021 222 2393 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## விற்பனைக்கு

19-கார் நிஷான் சுப்பர் சலூன்
விற்பனைக்குண்டு. (கலர்-சாம்பல்)
தொடர்பு: பக்கஸ் லேன், உடுவில் வீதி,
மானிப்பாய்.

## தவறிவிட்டது

இராசரத்தினம் மதீஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 800854733V யாழ். கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.
பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு.
தொ.பே.:0779773078

## தினசரி விமானசேவை

கொழும்பு -யாழ்.
யாழ். -கொழும்பு

DAYA AVIATION நிறுவனத்தினால் நான்கு பேர் பயணிக்கக்கூடிய இரு வழிப்பாதை தினசரி சிறுவிமான சேவை உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது.
ஒரு வழிப்பாதைக்கான கட்டணம்
ரூபா 30,000/=
உடனடிப்பயணத்துக்கு
தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.: 0114969116/ 011 542190
பக்ஸ்: 0114542360
மொபைல்: 0773846681

## பொதிகள் சேவை

யாழ். ⇒ கொழும்பு ⇒ உலக
நாடுகளுக்கிடையிலான
கடிதங்கள், பொதிகள் சேவை

**திருமுருகன் கொம்நெற்**

*259, கே.கே.எஸ்.வீதி, யாழ்.*
T.P. : 7835
*46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி*
T.P. : 7310

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் குபேந்திரன்
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் அப்புக்குட்டி தர்மலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2004 HNDA நண்பர்கள்,
உயர்தொழில்நுட்ப நிறுவனம்.

(57728)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்வி வலய
கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின்
அன்புத் தாய்

**திருமதி பரிமளம் பரமநாதன்**

அவர்கள் 31.01.2007 அன்று காலமான செய்தி அறிந்ததுடன் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம்,
சங்கானைக் கல்விக் கோட்டம்

(சி/51976)

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வலயக்
கல்விப் பணிப்பாளர்
ப.விக்கினேஸ்வரன்
அவர்களின்
பாசமிகு தாய்

**அமரர்**
**பரிமளம் பரமநாதன்**

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]

## கண்ணீர் அஞ்சலி



நாட்டுப்பற்றாளர்

**கணநாதன்**

(யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்)

*காலத்தால் விழாமல்*
*சுயமையால் விழுத்தப்பட்டவரே!*
*சுயநலமற்ற சீராளரே!*
*குணநாதராய் மிளிர்ந்த கணநாதரே!*
*விழுதாக விழுந்தீர் - நம்புகின்றோம்*
*உம் கனவுகளைக் காலம் நனவாக்கும்.*

*உம் கனவுகளோடு நாம்.* - பொதுமக்கள்.

(57723)

## கண்ணீர் அஞ்சலி

நெடுந்தீவு பிரதேச சபையில் கடமையாற்றும்
பழனி கருணாகரன் (கண்ணன்) அவர்களின் பாசமிகு மகன்

**டினேஷ்வரன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
நெடுந்தீவு பிரதேச சபை

(சி-51958)

## துயர் பகிர்கின்றோம்



வலிகாமம் வலயம் - கல்விப் பணிப்பாளர்
திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களின்
அன்புத் தாய்

**திருமதி பரிமளம் பரமநாதன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் பணிப்பாளருக்கும் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட
கல்விச் சமூகம் சார்பில்
தெல்லிப்பழை கோட்ட அதிபர்கள் சங்கம்.

(57732)

## 4ஆம் ஆண்டு நினைவு நாள்



**அமரர் கந்தையா இராசையா**

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்,
கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கம்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26.07.1938 | 19.01.2003 |

திதி: 03.02.2007

ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறாத உங்கள் நினைவலைகள்
மாறாத நெஞ்சில் வடுவாக
வாழும் வரையும் நீளுமையா.

மனைவி இ.தவமணிதேவி,
பிள்ளைகள் - இதயதேவி ரவிரதன்,
ஜெயதேவி செல்வராசா,
சிவதேவி புஸ்பகேந்திரன்(சுவிஸ்),
ஜீவதேவி உதயரத்தினம்,
இராசையா ஐங்கரன்(சுவிஸ்).

*'ஐங்கரபதி'*
*அல்வாய் தெற்கு.*

(57724)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் சின்னத்தம்பி



வெள்ளாம் போக்கட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னத்தம்பி நேற்று(02.02.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய ஆறுமுகம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரனும் விடத்தற்பளையைச் சேர்ந்த அமரர் சரவணமுத்து - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சரோசாதேவி (ஆசிரியை, வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரி), சித்திராதேவி (உடையார்கட்டு), வசந்தநாயகி(ஆசிரியை, சுவிஸ்), சிவகரன்(நன்னடத்தை அதிகாரி, சாவகச்சேரி), சிவாமினி(ஆசிரியை, அக்கராயன் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவீந்திரன் (கணக்காளர் M.P.C.S. துணுக்காய்), செல்வநாதன் (உடையார்கட்டு), ஜெயபாலன்(சுவிஸ்), கோமதி (கல்வி வலயம், சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு மாமனும் அபிநயா (வவுனியா), மேனகன், கீதகன், பவித்திரா, துவேதிகா (உடையார்கட்டு), கீர்த்தனா, கிரிசாந்(சுவிஸ்), மயூதனன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(02.02.2007)வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொற்புலவு மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெள்ளாம்போக்கட்டி,*
*கொடிகாமம்.*

*தொ.பே.: 0776694929,*
*0779235946*

(சி-51970)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

### திருமதி திரேசா அமிர்தராணி செல்லத்துரை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்து வந்தவருமான திரேசா அமிர்தராணி 30.01.2007 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எதிர்மன்னசிங்கம் -சிசிலியாம்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சூசைப்பிள்ளை செல்லத்துரையின் அன்பு மனைவியும் திருச்செல்வம், ஞானமலர், சுகிர்தமலர்(கனடா), ரஞ்சிதம், அமலநாதன்(ஜேர்மனி), அன்ரன் ஆகியோரின் சகோதரியும் பசில், ஜோய், றோய்(கனடா), ஆன்யூலியட்(கனடா), வின்ஸ்லஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ராஜினி(கனடா), பாலசிங்கம்(கனடா), பியூலா (கனடா), நிஷாந்தினி(கனடா) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.02.2007) சனிக்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*24, மருதடி லேன்,*
*யாழ்ப்பாணம்.*

(சி-51970)

தகவல்:
ரஞ்சிதம் குடும்பம்
(சகோதரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2006 இல் 102 மாணவர்களைச் சித்தியடையச் செய்து, 43.77 சதவீதச் சித்தி மூலம் யாழ். மாவட்டத்திலும் வடக்குக் கிழக்கு மாகாணத்திலும் அகில இலங்கையிலும் முன்னணி வகிப்பதற்கு கடின உழைப்பால் உயர்வுகள் பெறவைத்த அதிபர், உப அதிபர், பகுதித் தலைவர்கள், தர இணைப்பாளர்கள், ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரையும் மனம் நிறைந்து நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துவதிலே பெரு மகிழ்வெய்துகின்றோம்.

**இன்று (03.02.2007) சனிக்கிழமை காலை நடைபெறும் 2006 இற்கான பரிசளிப்பு விழாவில் தங்கப்பதக்கங்களைப் பெறும் மாணவர்கள்.**



**சு. வித்யாசாகர்-185**
மாவட்ட நிலை 1
அகில இலங்கையில் தமிழ் மொழி மாணவர்களில்
1 ஆம் இடம்



கௌ. லோகீஷன் 168 | இ. சிவேஸ்வரன் 168 | செ. லவினன் 168 | ஆ. மிதுனா 167 | ப. கதிர்தர்சினி 166 | பா. ஆதீபன் 165



தி. பிரசாந்தன் 164 | ச. பானுஜா 164 | மு. பவித்ரா 162 | ம. அருண்முகன் 160 | செ. சர்வாண்ஜா 160 | சி. மிதுசன் 159



நி. நிரோஜன் 159 | சி. சர்வக்ஞன் 158 | க. நிதுஸ்யன் 158 | செ. கவிதா 157 | செ. சாகித்தியா 155 | நா. சிந்துஜன் 155

**பரிசில்களையும் பதக்கங்களையும் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள்**



இ. ஜயராமன் 154 | தி. ஜனுஜா 154 | க. கௌதம் 152 | கி. சண்முகேசன் 151 | ச. மாதுளா 151 | பு. சஞ்சுதன் 151 | கு. பிரியதர்ஷன் 150 | ம. ஜீவஹாசன் 150 | ஸ்ரீ. நிஷனா 150 | க. அனோபன் 149



ச. கஜந்தன் 149 | ர. புரோஜியா 149 | ஏ. திவ்யா 148 | கு. சுயானி 148 | சி. பிரசாந் 147 | வ. ஷங்கவி 147 | க. நிசாந்தன் 147 | ஜெ. ஜங்கரன் 147 | கோ. பிரசாந் 147 | அ. சிந்துஜா 146



சி. புருஷோத் 146 | த. கீர்த்தனராம் 146 | ச. கபிலன் 146 | த. தஹாஷன் 146 | ஸ்ரீ. ஸ்ரீசங்கமீரா 146 | ச. சபேசன் 145 | பா. ஜிந்துசன் 145 | ஜெ. கிஷானா 145 | ப. கஜலக்சன் 145 | அ. அநுசன் 145



சி. கீதாஜினி 145 | சு. நரேந்திரன் 144 | மு. கபிலன் 144 | வி. மிதுஷன் 144 | ஆ. யதுர்சன் 143 | ந. வேதாஷினி 143 | சி. யாழமுதன் 143 | தி. கிருத்திகா 142 | ஜெ. ஜெகதீஸ்வரன் 142 | ச. கிருத்திகா 142



த. சுஜீவன் 141 | ஸ்ரீ. நிரோஜிதன் 141 | ர. ஷர்மிஜா 141 | ஜெ. சிவகஜன் 141 | பு. விதுர்சன் 140 | க. லக்சுமன் 140 | ஈ. சேயோன் 139 | சி. பிரவீனா 139 | கு. பிரசாத் 139 | சி. நிதர்சன் 139



சி. நிலக்சன் 139 | ச. சுநயனி 139 | சி. நிரோசன் 138 | சி. லக்சன் 138 | இ. லாவண்யா 138 | வி. வைகரன் 138 | ஸ்ரீ. ரதீசன் 138 | பா. நிருத்திகா 138 | யோ. துஷாரா 138 | கி. தரனிகா 138



ஸ்ரீ. மிதுசன் 137 | பே. கவியாளி 137 | பா. லிவின்சன் 137 | ச. கிரிஷான் 136 | கு. குணசிகா 136 | சி. திலக்ஷனா 136 | பா. அனுசாந்த் 136 | வி. விதுஷன் 136 | கோ. கார்மேகன் 136 | தே. சுதேசன் 135



சு. தாருயா 135 | சி. சுகன்ஜா 135 | லோ. நிருஷன் 135 | லோ.சுலக்சன் 134 | த. கீர்த்திகன் 134 | வே. சஜீவன் 134 | ந. பபிகரன் 134 | சி. அரவிந் 134 | மு. லக்ஷனா 134 | ஜெ. தயானி 134



கி. கஜன் 133 | ம. பசீசன் 133 | அ. சாருக்ஷன் 133

இவர்கள் அனைவரும் சகல கலைகளையும் பெற்ற கல்வியில் சிறப்புற வாழ்த்துவதோடு, தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கல்விச் செயற்பாடுகளிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் மிக நுணுக்கமாகச் செயற்திறனுடன் கருத்தூன்ற வைத்து, உன்னத நிலைக்கு வித்திட்ட பாடசாலை ஆசிரியப் பெருந்தகைகளுக்கு நன்றி கலந்த கௌரவிப்புக்களையும் பாராட்டுக்களையும் வழங்கி, இன்று பெருவிழா எடுத்து சிறப்பிப்பதையிட்டு பெருமையும் பேருவகையும் அடைகின்றோம். கடந்த பல வருடங்களாகத் தொடர்ந்து முன்னிலை பெற்ற எமது பாடசாலை வருங்காலத்திலும் பல முன்னேற்றகரமான சாதனைகளைப் படைத்து வெற்றிவாகைகள் சூடவும் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் நலமும் வளமும் பெருக வாழ்வாங்கு வாழவும் வாழ்த்துகின்றோம்.

**இந்துவின் ஆரம்பம் இனிய ஆரம்பம்**

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களின் பெற்றோர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி – அச்சுவேலி



து.தசோனியா
3 A

2006ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் க.பொ.த. உயர் தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துத் தந்த மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தரம் 5 புலமைப்பரிசில் - 2006

1) செல்வி சர்மினி இரவிச்சந்திரன் - 141
2) செல்வி மாதங்கி அமிர்தலிங்கம் - 139
3) செல்வி தயூதினி ஸ்ரீ - 138
4) செல்வி லகனிகா விநாயகமூர்த்தி - 137
5) செல்வன் கார்த்திக் கிருபானந்தம் - 137
6) செல்வன் கிருஷாந் பழனிவேல் - 135

க.பொ.த. உயர்தரம் - 2006

1) செல்வி தசோனியா துரைராசா - 3 A
2) செல்வி அகல்யா பிரான்சிஸ்கிறைன் - 2A,B
3) செல்வி சிவஞானம் சௌந்தரி - A,B,C

- பெற்றோர், பாடசாலைச் சமூகம்.

(சி/51948)

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாவிக்கப்பட்ட எஞ்சின் விற்பனைக்கு

எமது சங்கத்தின் 250 - ஈ.எல்.எவ். (E.L.F) வாகனத்தில் பாவிக்கப்பட்ட எஞ்சின் கெற் பழுதடைந்தமையால் கெற் தவிர்ந்த கியபொக்ஸ், டைனமோ, மோட்டருடன் விற்பனைக்கு உண்டு. சங்கக் காரியாலய நேரத்தில் இந்த எஞ்சினை பார்வையிட்டு இதன் கூறுவிலையை 10.02.2007 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக **'தலைவர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்'** என கடித உறையின் மேல் மூலையில் குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- பொது முகாமையாளர்.

(சி-51953)

## பகிரங்க ஏல விற்பனை

சங்குவேலி தெற்கு, மானிப்பாய் ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலய முன்றிலில் நிற்கும் பாரிய மகோற்கனி மரம் ஒன்று நாளை (04.02.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆலய நிர்வாக சபையினரால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

தொடர்பு: ஆலய நிர்வாக சபையினர்.

## பெயர் மாற்றம்

சோதிவேம்படி, மானிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த கறுப்பையா கணபதி ஆகிய நான் 01.02.2007 முதல் எனது பெயரை'கறுப்பையா கணாதிபன் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதையும், இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பிரயோகிப்பேன் என்பதையும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

சோதி வேம்படி,
மானிப்பாய். கறுப்பையா கணாதிபன்

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
◆ Assembling ◆ Upgrading ◆ Troubleshooting ◆ Fault Finding ◆ Repairing ◆ Servicing ◆ Software Installation ◆ Configuring ◆ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
◆ Introduction to Computer ◆ Operating Systems(Win XP) ◆ Internet & email ◆ Adobe Photoshop ◆ Adobe Premier ◆ Cool3D Studio ◆ Pinnacle Studio ◆ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
◆ Introduction to Computer ◆ Operating Systems(Win XP) ◆ Internet & email ◆ Adobe Photoshop ◆ Corel Draw ◆ Cool3D Studio ◆ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 05/02/2007- 09.00 AM

3 மாதகால
Diploma in Computerized Accounting புதிய பிரிவுகள் 03/02/2007 , 04/02/2007 ம் திகதியில் ஆரம்பமாகின்றது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:27.05.1931
மறைவு:14.01.2006
திதி: பிரதமை 03.02.2007

## அருணாசலம் கனகசபை

ஊருக்கு உதாரணமாக வாழ்ந்து
அயராத உழைப்பால் உயர்ந்து
எம் இனிய வாழ்விற்கு வழிகாட்டி
பண்பாளர்களாக எமை ஆக்கி -
வளர்த்த

எம் ஆசை ஐயா
நீங்கள் எமை எல்லாம் விட்டு
ஆண்டு ஒன்று சென்ற போதும்
உங்கள் நினைவு எங்களை விட்டு -
அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
கிராயிட்டி வைரவரைப்
பிரார்த்திக்கின்றோம்.

5ஆம் கட்டை, பெரியவிளான்,
இளவாலை. (57696) குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன்

(இராசப் பத்தர்)

தோற்றம் 26-04-1926 மறைவு 04-01-2007

எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றிகள். இன்று (03.02.2007) சனிக்கிழமை அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரண நிகழ்வும் எமது இல்லத்தில் இடம்பெறவுள்ளதால் அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
இல.12,செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (57662) குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

## லோறன்ஸ் அலெக்சாண்டர்

(A.J.M. ரெக்ஸ், நியூட்டன் றேட் சென்ரர்-யாழ்.உரிமையாளர்)

அன்னை மடியில் 12-04-1953 ஆண்டவன் அணைப்பில் 10-02-2006

ஆண்டொன்று மறைந்தாலும்
உங்கள் அன்பை மறப்போமா
உங்கள் புன்னகையை மறப்போமா
உங்கள் பாசத்தை மறப்போமா
உங்கள் பரிவை ஆதரவை மறப்போமா
எதை மறப்போம் மறக்கமாட்டோம்
எம் நெஞ்சிருக்கும்வரை
உங்கள் நினைவிருக்கும்

அன்னாரின் ஆன்மஇளைப்பாற்றிற்காக புனித அன்னாள் ஆலயத்தில் இன்று (03-02-2007) சனிக்கிழமை காலை 7.30 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுத்து பின்பு இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செல்வமாணிக்கம் (யோசப்)
யாவில் லேன், ஆனைக்கோட்டைச் சந்தி,
ஆனைக்கோட்டை. (57697)

மனைவி, மக்கள்,
சகோதர, சகோதரிகள்.

## யாழ்., நல்லூர் கோட்ட அதிபர்களுக்கு கூட்டம்

யாழ்., நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கல்விக் கோட்டங்களின் பாடசாலைகளில் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களையும் இக் கூட்டத்தில் பங்கேற்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(1-51)

## விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு பிரதான வீதியில் 4 ¾ பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 011 4949234

## தவறிவிட்டது

இராஜேஸ்வரன் மகிதரன் ஆகிய எனது தே. அ. அட்டை இல.- 822781284V கடந்த திங்கட்கிழமையிலிருந்து வைத்தீஸ்வராச் சந்திக்கும் கொட்டடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

201,மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2113

## தவறிவிட்டது

சண்முகம் விருத்தாசலம் என்பவருடைய மோட்டார் சைக்கிளின் காப்புறுதிப்பத்திரமும் ச.அருணாசலம் என்பவருடைய மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரமும் ஒரே பையுடன் திருநெல்வேலிக்கும் கச்சேரி - நல்லூர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 21/ 15, புவனேஸ்வரியம்மாள் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்து [illegible]

தொ.பே. [illegible]736

## Request for Quotations – Procurement of Services and Civil Works (TP/2007/03)

UNDP

United Nations Development Programme, Sri Lanka invites Request for Quotations (RFQ) for the following services projects in **Ampara** and **Jaffna** districts. The documents can be collected from the locations given against each action from **February 5, 2007**.

| Lot Number | Description of work | Minimum Requirement | Contact Location |
|---|---|---|---|
| JAF/47437/09-A | Alternative income generation activities for IDP youth residing in temporary accommodation centres in Jaffna D.S Division | INGO/NGO | UNDP, 123/1 Temple Road Jaffna |
| JAF/47437/09-B | Alternative income generation activities for IDP youth residing in temporary accommodation centres in Chavakachcheri D.S Division | | |
| JAF/47437/09-C | Alternative income generation activities for IDP youth residing in temporary accommodation centres in Karaveddy D.S Division | | |
| JAF/47437/09-D | Alternative income generation activities for IDP youth residing in temporary accommodation centres in Point Pedro D.S Division | | |
| AMP/47437/12 | Construction of Panankadu Irrigation Channel, at Kannagipuram, Alayadivempu D.S Division | ICTAD M6 in Irrigation | UNDP, 63, Jayawardenapura, Ampara |

Documents to be presented for obtaining RFQ documents:
- Request letter for document on the Institution's business letterhead
- Documentary evidence to prove the above minimum requirement.

Completed documents will be accepted at the same locations from where the documents are distributed until **5 p.m. on February 16, 2007**. Documents can also be obtained from and submitted to Infrastructure Analyst, UNDP Transition Programme, 12, Bagatalle Road, Colombo 03.

No telephone inquiries will be solicited and UNDP reserves the right to cancel all or one of the above actions and/or reject any quotations, without assigning any reasons.

# 31 ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 1932 - 07 - 09



இறப்பு 2007 - 01 - 04

திருமதி

## இராசலிங்கம் அன்னப்பிள்ளை

கடந்த 04.01.2007 அன்று சிவபதமடைந்த எமது தாயாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.02.2007) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்: இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

261/6, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (57597) -குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## நாவாலியூர் செல்வராஜா செல்வராணி (மம்மி)

(HSCMF SECRETARY)



சோம்சுந்தரப்புலவர் வீதி, நாவலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராஜா செல்வராணி (Mummy) கடந்த திங்கட்கிழமை யாழ்.மருத்துவமனையில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கந்தையா - அழகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்வராஜாவின் (Village Headman, GS -Navaly) அன்பு மனைவியும் நவாலி சென்ற் பீற்றர்ஸ் ஆலயத்தில் காலஞ்சென்ற செல்வி ஹேமலதா (கிராம அதிகாரி, J/134 VSW -HSCMF), ரமேஷ் (Local Government Assistant, Pradeshiya Sabha, Velanai, Meadiator, செய்தியாளர்), சுரேஷ்(Teacher - Chavakachcheri Hindu College), சதீஷ் (Samurdhi Development Officer - Vali south west Ds - Office) ஆகியோரின் அன்புத் தாயும் சுதாரமேஷ் (Teacher, Manipay Memorial Navothaya School), மகாதேவி சுரேஸ் (Programme Assistant (Finance) -DPDHS -Jaffna) ஆகியோரின் அன்பு மாமியும் அஸ்வினி ரமேஷ் (Manipay Humedica International School), ஒசாயினி ரமேஷ் (Manipay Humedica International School) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்வராஜா (நவாலி லஷ்மி ஸ்ரோர்ஸ்), இந்திராணி (நோர்வே), சந்திரகாந்தி, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 30.01.2007 அன்று ஹேமா இல்லத்தில் இடம்பெற்று, பி.ப. 4 மணியளவில் நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல்தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.: 0094 602212676
'ஹேமா இல்லம்'
புலவர் வீதி,நவாலி வடக்கு,
மானிப்பாய். (சி-51960)

தகவல்:
எஸ்.ரமேஷ் (LGA),எஸ்.சுரேஷ் (Teacher), எஸ்.சதீஸ்(S.D.O)
(பிள்ளைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

## பேச்சுப் பற்றிய சலசலப்பு

சம்பூர், வாகரை, முகமாலை என்று தொடர்ந்து தமிழர் தாயகப் பிரதேசங்களைக் கைப்பற்றி, ஆக்கிரமித்துத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் முழு முனைப்பில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளும் ஆட்சித் தலைமையும் உள்ளன.

கடந்த ஓரிரு ஆண்டுகளாக வடக்கிலும், கிழக்கிலும் நிழல் யுத்தமாகப் புகைந்துகொண்டிருந்த இனமோதல்கள் கடந்த ஓகஸ்டில் பிரகடனப்படுத்தப்படாத முழு யுத்தமாக வெடித்து, கொழுந்துவிட்டெரியத் தொடங்கிய பின்னர் அமைதி முயற்சிகள் - சமாதானப் பேச்சுகள் - பற்றிய எதிர்பார்ப்பு 'கிணற்றில் போட்ட கல்லாக' அமுங்கிப் போயின. இப்போது மீண்டும் சாடைமாடையாக பேச்சுப்பற்றிப் பேசப்படுகின்றது. முணுமுணுக்கப்படுகின்றது.

''இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமேயல்ல; பேச்சு மூலமான சமரச முயற்சியே ஒரே ஒரு வழி; ஒரே மார்க்கம்'' - என்று இவ்வார முற்பகுதியில் காலியில் நடந்த இலங்கை அபிவிருத்திக் குழுவின் மாநாட்டில் அமெரிக்கத்தூதுவர் பகிரங்கமாக அறிவித்ததுடன் தற்போதைய பேச்சுச் சலசலப்பு மீண்டும் ஆரம்பமாகியிருக்கின்றது.

ஊதிப் பெருத்த புதிய அமைச்சரவையில் புதிய வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற கையோடு புதுடில்லிக்குப் பறந்த றோஹித போகொல்லாகம அங்கு வைத்து புலிகளைப் பேச்சுக்கு வரும் அழைப்பை - பெயருக்கேனும் - விடுத்தார்.

இந்தியாவும் பதிலுக்கு, ''எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய - அதிக அதிகாரங்களுடன் கூடிய - அதிகாரப்பகிர்வுத்திட்டமே இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரே வழி. அதை சமர்ப்பிப்பதற்குப் பொருத்தமான - உகந்த - தருணமும், சந்தர்ப்பமும் இதுவே. எனவே, தாமதிக்காமல் அதனை சமர்ப்பித்து பேச்சை ஆரம்பியுங்கள்!'' - என்று இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு ஆலோசனை தெரிவித்து அனுப்பி வைத்தது என்று தகவல்.

தவிரவும், அண்மைக்காலமாகப் புலிகளின் அரசியல் தலைமையின் செயலகம் அமைந்துள்ள கிளிநொச்சிக்கு கண்காணிப்புக் குழுவினர், சர்வதேசப் பிரதிநிதிகள் போன்றோர் செல்வதற்கு ஹெலிக்கொப்டர் வசதிகளை வழங்க மறுத்துவந்த இலங்கை அரசு, திடீரென இவ்வாரத்தில் தனது போக்கை மாற்றிக்கொண்டு இறங்கி வந்தது.

கடந்த புதனன்று இலங்கைக் கண்காணிப்புக் குழுத் தலைவரும், அடுத்த நாள் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் கிளிநொச்சி செல்வதற்கு ஹெலிக்கொப்டர் வசதிகளை அரசுத் தலைமை வழங்கியமையும், இவர்கள் இருவரும் அடுத்தடுத்து கிளிநொச்சிக்குப் பறந்தமையும் அமைதி முயற்சிகளுக்கு புத்துயிர்ப்பு - புது உத்வேகம் - ஊட்டப்படுகின்றதோ என்ற எதிர்பார்ப்பைப் பலரின் மனதிலும் எழுப்ப வைத்துள்ளன.

ஆனால் உள்ளகத் தகவல்களின்படி அமைதி முயற்சிகளில் புதிய முன்னேற்றங்களோ, புது நகர்வுகளோ இல்லை. அதற்கான நிலைமாற்றங்கள் ஏதும் தரப்புகளின் பக்கங்களில் ஏற்படவேயில்லை என்கின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்.

வாகரை வெற்றியை பெரிய விவகாரமாகக் கொண்டாடும் அரசுத்தரப்பு, அந்த வெற்றி காரணமாக இராணுவச் சமவலு நிலையில் தனது கை ஓங்கியிருப்பதாகக் கருதுகிறது.

இராணுவ மேலாதிக்க நிலையில் தான் உயர்ந்திருப்பதாக அரசுத்தரப்புக் கருதும் சூழலில் - அந்தப் பின்னணியில் - அமைதி முயற்சிகளுக்குப் புலிகள் இறங்கி வருவார்கள் என எதிர்பார்ப்பது அர்த்தமற்றது; நடக்கமுடியாதது.

யுத்தநிறுத்த உடன்பாட்டை அரசுத்தரப்பு செம்மையாக நடைமுறைப்படுத்திக் கடைப்பிடிக்குமானால் பேச்சை நாளையே தொடங்குவதில் தடை ஏதும் இல்லை என்றே புலிகள் தரப்பு மேற்குலகுக்கும் அனுசரணையாளர்களுக்கும் தொடர்ந்து கோடிகாட்டி வந்திருக்கிறது. இப்போதும் புலிகளின் பதில் அதுவே என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஆனால், யுத்த நிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்த இணங்குவது என்ற அந்த விவகாரம்தான் இங்கு இடிக்கின்ற அம்சமாக உள்ளது.

அதற்கு அரசுத்தரப்பு இணங்குவது என்பது அரசைப் பொறுத்தவரை இலேசான விவகாரம் அல்ல.

யுத்தநிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்த சம்மதிப்பதானால் -

* அந்த உடன்பாட்டின் கீழ் வரையறை செய்யப்பட்ட பிரதேசங்களின் அடிப்படையில் - அண்மைக்காலத்தில் தான் புதிதாக ஆக்கிரமித்த பகுதிகளை விட்டு - அரசுப் படைகள் வெளியேறவேண்டியிருக்கும்.
* அந்த உடன்பாட்டில் - கறுப்பு, வெள்ளையில் எழுதப்பட்டபடி - 'ஏ 9' கண்டி வீதி ஊடான பாதையைக் கட்டுப்பாடு ஏதுமின்றி பயணப் போக்குவரத்துக்குத் திறந்துவிடவேண்டும்.
* தமிழர் தாயகப் பிரதேசங்களில் தான் மேற்கொண்டுவரும் தமிழர் விரோதக் கெடுபிடிப் போக்குகளை வாபஸ் பெற்று, இயல்பு நிலையை ஏற்படுத்தச் செய்யவேண்டும்.
* அவசரகாலச்சட்ட ஒழுங்குகளின் கீழ் கொண்டுவரப்பட்ட - பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகள் என்ற பெயரிலான - அத்துமீறல் மற்றும் மனித உரிமைமீறல் விதிகளை வாபஸ் பெற்று, அத்தகைய நடவடிக்கைகளை உடன் நிறுத்தவேண்டும்.

இப்படிப் பலவற்றை அரசுத்தரப்புச் செய்ய முன்வராத பட்சத்தில் பேச்சு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதும் -

அவ்வாறு அரசுத்தரப்பு இறங்கி வருவதற்கான சாத்தியங்கள் ஏதும் இல்லை என்பதும் - தெளிவு.

ஆகவே பேச்சென்ற பேச்சே, பேச்சோடு போய்விடும் என்ற நினைப்பில் - நிலையில் - மாற்றம் ஏதுமில்லை என்பதே உண்மையாகும்.

# விமான நிலையத்தில் நேற்று ரணிலுக்கு உற்சாக வரவேற்பு

கொழும்பு, பெப். 03

நேபாளம் மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடு திரும்பிய எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து கொழும்பு வரை வாகனத் தொடரணிமூலம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் எம்.பிக்கள், மாகாண மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் பிரமுகர்கள் மற்றும் பெருந்திரளான ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து பிற்பகல் 12.30 மணியளவில் ரணில் விக்கிரமசிங்கவை இவ்வாறு ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

கட்சியில் இருந்து பெரும் எண்ணிக்கையான எம். பிக்கள் அரசின் பக்கம் தாவிய போதிலும் நாம்சோர்ந்துவிடவில்லை என்பதையும் கட்சி இன்னும் பலமாகவே உள்ளது என்பதையும் கட்சிக்கு மக்கள் ஆதரவு என்றும் உள்ளது என்பதையும் காண்பிக்கவே இந்த வரவேற்பு ஏற்பாடு செய்யப்பட்டது என்று அக்கட்சியின் எம். பியும் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

கட்சியை உடைத்தெடுக்கும் சதித்திட்டத்தை எவர் மேற்கொண்டாலும் அது வெற்றியளிக்காது. அத்திட்டங்கள் அத்தனையையும் தவிடுபொடியாக்கிவிடுவோம்.

தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதைத்தொடர்ந்து கட்சி தாவியவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைபற்றி முக்கிய தீர்மானம் எடுக்கப்படும் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ - 7)

# பூஸா கைதிகளின் உறவினர்கள் ஜனாதிபதியைச் சந்திக்க முயற்சி

கொழும்பு, பெப். 03

காலி பூஸா தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள திருகோணமலையைச் சேர்ந்த கைதிகளின் உறவினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து உரையாடுவதற்கான ஏற்பாடுகளை பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் மேற்கொண்டுள்ளார்.

காலி பூஸா தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் திருகோணமலை - மூதூரைச் சேர்ந்த கைதிகளில் 15 பேரின் உறவினர்கள் நேற்று பூஸா முகாமிற்குச் சென்று அக்கைதிகளைப் பார்வையிட்டனர்.

இக்கைதிகளை விடுவிப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ள அவர்களின் உறவினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரையும் பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணனையும் தொடர்புகொண்டு பேசியுள்ளனர். (ஐ - 7)

# இரும்புக் குண்டுகள் கடத்தல் விவகாரத்தின் முக்கிய சூத்திரதாரி பாலா 'மாஸ்ரர்'?

## 'கியூ' பிரிவுப் பொலிஸார் தகவல்

சென்னை, பெப். 03

இலங்கைக்கு இரும்புக் குண்டுகள் கடத்தப்படவிருந்த விவகாரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை உறுப்பினர் 'மாஸ்ரர்' என அழைக்கப்படும் பாலா என்பவர்தான் முக்கிய சூத்திரதாரி என விசாரணையிலிருந்து தெரியவந்திருப்பதாக 'கியூ' பிரிவுப் பொலிஸாரை மேற்கோள்காட்டி தமிழக நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மும்பையிலிருந்து சென்னைக்குக் கடத்தி வரப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்படும் பெருமளவு தொன் எடைகொண்ட இரும்புக் குண்டுகளை 'கியூ' பிரிவுப் பொலிஸார் அண்மையில் பறிமுதல் செய்திருந்தனர். இந்தக் கடத்தல் விவகாரத்தில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஈழத் தமிழர் உட்பட எட்டுபேரைப் பொலிஸார் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

இந்நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ள ஈழத்தமிழரான சிவகரனிடமிருந்து 'கியூ' பிரிவுப் பொலிஸார், ஏராளமான தகவல்களைப் பெற்றுள்ளனர் என தமிழக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சிவகரன் குறித்த தகவலின் பேரில் இந்தக் கடத்தல் விவகாரத்தில் 'மாஸ்டர்' என்பவர் தீவிர பங்காற்றியுள்ளார் எனத் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தகவல் தெரிவித்தனர்.

அதேவேளை, மும்பை நல் பஜாரைச் சேர்ந்த அஸ்கர் அலி, மீரான்சாகிப் ஆகியோரை 'கியூ' பிரிவுப் பொலிஸார் மும்பையில் கைதுசெய்தனர். இவர்கள் மும்பையிலிருந்து ரயிலில் நேற்றுமுன்தினம் அதிகாலை சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களை 'கியூ' பிரிவுப் பொலிஸார் எழும்பூர் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். அவர்களைப் 13ஆம் திகதி வரை காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். (எ)

# வாகரை அகதிகள் ஆலையடிவேம்பில் உணவு உடையின்றித் தவிப்பு

மட்டக்களப்பு, பெப். 3

யுத்த சூழ்நிலையால் கடந்த வருடம் டிசம்பர் மாத நடுப்பகுதியில் வாகரைப்பகுதியில் இருந்து ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள கோளாவில் கிராமத்தில் தஞ்சமடைந்துள்ள 52 குடும்பங்களுக்கு எந்தவிதமான நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லையென அறியவருகிறது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட கிராமசேவையாளர் எஸ்.மோகனிடம் வினவியபோது, வாகரைப் பகுதியில் இருந்து 52 குடும்பங்கள் தனது பிரதேசத்திற்கு வந்துள்ளார்கள் என்றும், ஏற்கனவே திருமலை மாவட்டத்தின் பல்வேறு பிரிவுகளிலுமிருந்து வந்த குடும்பங்கள் 173 இருக்கின்றன என்றும் பிரதேச செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகத்தெரிவிக்கிறார். ஆனால், வாகரையிலிருந்து கோளாவிலில் தஞ்சமடைந்த 52 குடும்பங்களும் ஒரு மாதத்துக்கு மேல் உணவு, உடையின்றி பரிதவிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட தொண்டர் நிறுவனங்கள் இருந்த போதிலும் இவர்களுக்கு உணவு, உடைகள் வழங்குவதற்கு முன்வரவில்லை.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்திலிருந்து வெளியேறி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அகதிகளாக இருக்கும் சகல குடும்பங்களையும் மீண்டும் சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கான முன் நடவடிக்கையாக விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (108)

# மாணவரின் வகுப்புப் புறக்கணிப்பு நான்காவது நாளாகத் தொடர்ந்தது

யாழ்ப்பாணம், பெப்.3

வடமராட்சியில் இரு பாடசாலைகளில் காணாமற்போன மாணவர்களை விடுதலை செய்யக்கோரி குடாநாடு தழுவிய ரீதியில் மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பை நேற்று வெள்ளிக்கிழமை நான்காவது நாளாகவும் மேற்கொண்டனர்.

வடமராட்சியில் ஆரம்பமான மாணவர்களின் வகுப்புப் புறக்கணிப்பு குடாநாட்டில் விடுமுறை தினமான வியாழன் இடைவெளியுடன் நேற்றும் இடம்பெற்றதாகப் பிரதேசங்களில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. சில பாடசாலைகளில் கணிசமான மாணவர்கள் வகுப்புகளுக்குச் சமுகமளித்தனர் என்றும் அத்தகவல்கள் தெரிவித்தன.

பாடசாலைகளில் செயற்படும் மாணவர் ஒன்றியங்களின் ஏற்பாட்டில் இந்தப் புறக்கணிப்பு இடம்பெறுவதாகக் கூறப்பட்டது.

**கல்வியைச் சீர்குலைக்கும் செயல்**

இதேவேளை - அப்பாவி மாணவர்களை கடத்திச்சென்று, இராணுவமே அதனை மேற்கொண்டதாகக் கூறிக் கல்வியை சீர்குலைப்பதற்காக பாடசாலைப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளப் புலிகள் உந்துத ளிந்து வருகின்றனர்.

இவ்வாறு, பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் மாணவர்களின் வகுப்புப் பகிஷ்கரிப்புத் தொடர்பாக விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

வடமராட்சியில் அவர்கள் ஆரம்பித்து வைத்த பகிஷ்கரிப்பை குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் பரப்புவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளின்போது, அந்தப் பகுதிகளில் வாழும் பெற்றோர் மற்றும் மாணவர்கள் புரிந்துகொண்டு இந்த முயற்சியை முறியடித்துள்ளனர் - என்றும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

**நாளை**

தை - 21
ஞாயிற்றுக்கிழமை
04.02.2007
திதி: துதியை
பிற்பகல் : 12.17
நட்சத்திரம் : மகம்
முற்பகல்: 10.41
சுபநேரம் : 09.35 - 11.05
ராகுகாலம் : 05.05 - 06.35

## கீரிமலையில் இன்று முதல் விசேட பூசை வழிபாடுகள்

வலி. தென்மேற்கு, பெப்.3

கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் வருடாந்த உற்சவத்தை ஒட்டிய பூசை வழிபாடுகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

விசேட வழிபாட்டின் இறுதி நாளான எதிர்வரும் 17ஆம் திகதி மகா சிவராத்திரி தினத்தன்று விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (1-135)

**குடாநாட்டின் குட்டிச் செய்திகள் — யாழ்ப்பாணம்**

## கப்பல் பயணிகள் நேற்றும் ஏமாற்றம்

கப்பல் பயணதுக்கென யாழ். ரயில் நிலைய வீதியில் நேற்றுக் கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

கப்பல் பயணம் நடைபெறவுள்ளதாகப் பரவிய தகவல் ஒற்றையடுத்து பயணத்துக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்ட நூற்றுக்கணக்கானோர் நேற்றுக் காலை யாழ். ரயில் நிலைய வீதியில் திரண்டனர்.

பயணம் செய்வதற்காக ஆர்வத்துடன் கூடியிருந்த பயணிகள் அங்கு நீண்ட நேரம் காத்திருந்த போதும் கப்பல் பயணம் தொடர்பான தகவல் எதுவும் கிடைக்காத நிலையில் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர். (அ-4)

## 5 மாதிரி ஆரம்ப பாடசாலைகள்

யாழ். மாவட்டத்தில் புதிய மாதிரி ஆரம்பப் பாடசாலைகளாக ஐந்து பாடசாலைகள் கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம் தெரிவித்துள்ளனர்.

யாழ். சன்மார்க்க வித்தியாலயம், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், சண்டிலிப்பாய் வடக்கு அ.மி.த.க. பாடசாலை, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், வேலணை செட்டிபுலம் அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளே மாதிரிப் பாடசாலைகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (1-4)

## பரிசளிப்பு விழா

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையிலிருந்து கடந்த ஆண்டு 5ஆம் தர புலமைபரிசில் பரீட்சையில் தோற்றிச் சிறப்பாக சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று சனிக் கிழமை காலை 8.30மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

## மல்லாகம் கிளை உடைத்து திருட்டு

மல்லாகம் குளமங்கால் பகுதியில் உள்ள சங்கக்கிளை உடைக்கப்பட்டு பல லட்சம் ருபா பெறுமதியான அத்தியவசியப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு இத்திருட்டு இடம்பெற்றுள்ளது. சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்குவதற்கென வைக்கப்பட்டிருந்த அரிசி, சீனி, பருப்பு, மா உட்பட பல்வேறு வகையான பொருள்களும் திருட்டுப் போயுள்ளன.

அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குரிய இக்கிளையானது கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரும் திருட்டுப் போயுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (68)

## புங்குடுதீவு வைத்தியசாலை இயங்க ஆரம்பித்தது

புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை கடந்த புதன்கிழமை தொடக்கம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

வாரத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் வைத்தியசாலையில் சிகிச்சைகள் நடைபெறும். வேலணை வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்திய அதிகாரி ஆ. திருநாவுக்கரசு இவ் வைத்தியசாலையில் பதில் பணியாற்றுகிறார். (1-202)

## விவசாயக் கல்லூரி அனுமதி; நேர்முகப் பரீட்சை

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் டிப்பிளோமா பயிற்சிநெறிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்க முடியாதவர்களுக்கான நேர்முகப்பரீட்சை திருநெல்வேலி, பலாலி வீதியில் உள்ள பிரதி விவசாயப்பணிப்பாளர் அலுவலகத்தில் நாளை மறுதினம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சையில் கலந்துகொள்வதற்குரிய கடிதங்கள் பரீட்சார்த்திகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் -

அனுமதி அட்டையை வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் அழைப்புக் கடிதம் கிடைக்காவிடினும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கலாம் என்றும் பிரதி விவசாய பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6,600 ஹெக்டெயரில் இடைக்காலப் பயிர்ச்செய்கை; உணவு விவசாயத் திட்டத்தின் அனுசரணையுடன்

யாழ்ப்பாணம், பெப்.3

குடாநாட்டில் நிலவும் உணவுத் தட்டுப் பாட்டைக் கருத்தில் கொண்டு, இடைக்காலப் பயிர்ச்செய்கைத் திட்டம் ஒன்றை உணவு விவசாய ஸ்தாபனம் (FAO) முன்னெடுக்கவுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் இத் திட்டத்தின் பிரகாரம் மொத்தம் 6,600 ஹெக்டெயரில் உபஉணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும்.

நெல் அறுவடை முடிந்த பின்னர், பயறு, கௌபி, உழுந்து, எள்ளு, நிலக்கடலை மற்றும் மரக்கறி வகைகள் பயிர் செய்யப்படும். உள்ளீடுகள் இலவசமாக வழங்கப்படும். இதற்காக மொத்தம் 4000 பயனாளிகள் தெரிவு செய்யப்படுவர் என்று பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் உதயனுக்குத் தெரிவித்தார்.

தொல்புரம், சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் தெரிவு செய்யப்படும் 1885 விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களம் விதை, பசளை மற்றும் உள்ளீடுகளை நேரடியாக வழங்கும்.

புங்குடுதீவு, வேலணை, உடுவில், புலோலி, அம்பன், கைதடி, நல்லூர் பகுதிகளைச் சேர்ந்த 915 பயனாளிகளுக்கு சேவாலங்கா நிறுவனமும்- கீரிமலை விவசாயப் பிரிவைச் சேர்ந்த 560 பயனாளிகளுக்கு 'கெயார்' ஸ்தாபனமும்-

புத்தூர், உரும்பிராய் பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்படும் 640 விவசாயிகளுக்கு 'கரித்தாஸ்' தொண்டு நிறுவனமும் உள்ளீடுகளை வழங்க உள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்படும் விவசாயிகளுக்கான பயிற்சியை விவசாயத் திணைக்களம் வழங்க உள்ளது. (அ-88)

# ஆயுதங்களைக் கைவிட்டுப் பேச்சுக்கு வர புலிகளை அமெரிக்கா வற்புறுத்த வேண்டும்

## அந்நாட்டுத் தூதரிடம் ஹெல உறுமய கோரிக்கை

கொழும்பு, பெப்.3

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுக்கு வருவதாகவிருந்தால் வன்முறைகளைக் கைவிட்டு அவர்கள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டே வரவேண்டும் என்ற அழுத்தத்தை அமெரிக்கா புலிகளுக்கு வழங்கவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் எம்.பிக்கள் நேற்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக்கை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் சந்தித்து உரையாடினர். அப்போதே இவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அச்சந்திப்பின்போது அமெரிக்கத் தூதரிடம் அவர்கள் மேலும் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு - கிழக்கில் மாத்திரமின்றி நாடு முழுவதிலும் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். சமாதானத்தின் மீது சிறிதளவேனும் அவர்களுக்கு அக்கறையில்லை என்பதை அவர்கள் தெளிவாக உணர்த்தி வருகின்றனர்.

கிழக்கிலே உள்ள மூவின மக்கள் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்தத் தொடங்கினர். அம்மக்கள் அனைவரும் எம் நாட்டு மக்கள் என்றபடியால் அவர்களை பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து விடுவிக்க வேண்டிய கடப்பாடு இந்த அரசுக்கு இருந்தது.

அந்தக்கடப்பாட்டை அரசு சரியான முறையில் நிறைவேற்ற முற்பட்டதன் காரணமாகவே கிழக்கில் இருந்து பயங்கரவாதத்தை அரசு படையினரால் விரட்டியடிக்க முடிந்தது.

நாம் யுத்தத்தை விரும்பவில்லை. ஆனால், பயங்கரவாதிகள் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தும்போது அதை அரசு வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதையும் நாம் விரும்பவில்லை.

இந்த விடயத்தில் அரசு சரியான முறையில் செயற்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

இச்சந்தர்ப்பதில் உரையாற்றிய அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் இலங்கையில் பயங்கரவாதத்தை முற்றாக இல்லாதொழிக்க அமெரிக்கா உதவும் எனக் கூறியுள்ளார். (ஐ-7)

# கட்டடங்களுக்கான நிதி ஒதுக்கீடு மீளத் திரும்பும் பாதிப்பு நிலை

யாழ்ப்பாணம், பெப்.3

குடாநாட்டில் கட்டடப் பொருள்களுக்கு நிலவிவரும் தட்டுப்பாட்டால், பாடசாலைகளின் கட்டட நிர்மாணப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட பல மில்லியன் ரூபா நிதி மீளத் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு ஆய்வு கூடங்கள், வகுப்பறைகள் போன்றவற்றை நிர்மாணிப்பதற்கென பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்டடப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மற்றும் அதிகரித்தவிலையால் நிர்மாணவேலைகளை ஆரம்பிக்க முடியவில்லை. இதனால், ஒதுக்கப்பட்ட நிதி மீளத் திரும்பும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சிமெந்தின் விலை மிகவும் உயர்ந்துள்ளதால் ஒப்பந்தகாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட தொகை பணத்திற்குள் கட்டட வேலைகளைச் செய்து முடிக்க இயலாத கஷ்ட நிலையும் தோன்றியுள்ளது (202-வ)

# குடாநாட்டில் ஐஸ் உற்பத்தி பெரிதும் வீழ்ச்சி கண்டுள்ளது

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் குடாநாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையால் ஐஸ் உற்பத்தியாளர்கள் தொழில் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத் தலைவர் ரி.தவரட்ணம் இத் தகவலைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் கடற்றொழில் மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டதை அடுத்து ஐஸ் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

தற்போது கடற்றொழிலுக்குச் செல்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதி வழங்கப்படுகின்றது. இதனால் மாதாந்தம் 5 மெற்றிக்தொன் ஐஸ் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றது.

95ஆம் ஆண்டு காலப்பகுதிக்குப் பின்னர் குடாநாட்டில் மதாந்தம் 25மெற்றிக் தொன் ஐஸ் உற்பத்தி செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது- என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-4)

# லண்டன் இந்தியத் தூதரகம் முன் திங்களன்று ஈழத்தமிழர்கள் கவனஈர்ப்புப் போராட்டம்

லண்டன், பெப்.3

ஈழத்தமிழர்களின் அவல நிலைமையை இந்தியாவுக்கு எடுத்துரைக்கும் வகையில் லண்டனில் உள்ள இந்தியத் தூதரகம் முன்பாக அங்கு வாழும் ஈழத் தமிழர்கள் கவனஈர்ப்புப் போராட்டம் ஒன்றை நாளைமறு தினம் திங்கட்கிழமை நடத்தவுள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள், கொலைகள் மற்றும் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் இன ஒழிப்பு நடவடிக்கைகளை வெளிக்கொணருமுகமாக இப்போராட்டம் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றில் கறை படிந்த நாளான ஸ்ரீலங்காவின் சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்க, கறுப்பு உடை அணிந்து இந்தியத் தூதரகத்துக்கு முன் அனைவரையும் அணிதிரளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இலங்கை அரசுக்கு வழங்கும் சகல விதமான உதவிகளையும் நிறுத்துமாறும் இந்திய அரசாங்கத்திடம் கோரும் மகஜர் ஒன்று லண்டனில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்படும். (அ-ரி)

Diploma in Internet & E-Mail
Days :- Sat, Sun
Start on - 04.02.2007
Speed Batch Only 10 Hours
Time :- 11.00 a.m
Fee :- 1000/=
Only For 10 Students
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்!
CB Computer Academy
Station Road, Kondavil. ☎:-021-4590291

**தவறிவிட்டது**

யாழ்ப்பாணத்துக்கும் மானிப்பாய்க்கும் இடையில் பெறுமதிமிக்க நகைப்பொதி தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:- மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய்.
தொ.இல:- 0776251776.

**புவியியல்**
சுன்னாகத்திலும்
DAY CLASS 07, 08, 09
V.கிருபாகரன் B.A Hons (Geography-Spe)
* பயிற்சிகளும் பரீட்சைகளும்.
* தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
New A.A.C

# 8ஆம் திகதி ஓய்வூதியம்

குருநகர், பெப்.3

அரச ஓய்வூதியர்களின் இம்மாத (பெப்ரவரி) ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் எட்டாம் திகதி வியாழக்கிழமை சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்களின் வங்கிகளில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (51)

## கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்டுவருகின்றது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் எஸ்.இரவீந்திர நாத் கடந்த டிசம்பர் மாதம் 15ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஒன்றரை மாதங்களாகத் தடைப்பட்டிருந்த பல்கலைக்கழக கல்வி நடவடிக்கை கள் கடந்த திங்கட்கிழமையே ஆரம்பிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## சுதந்திர தின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் சவால்களையும் எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளது என பாதுகாப்பு உயரதிகாரி ஒருவர் கூறினார்.

''களமுனையில் பின்னடைவுகளைச் சந்தித்துவரும் புலிகள், நயவஞ்சகத் தாக்குதல்களைக் கொழும்பில் மேற்கொள்வதன் மூலம் தமது கைவரிசையைக் காட்டத் திட்டமிடலாம். எதையும் எதிர்கொள்ள முழு உஷார் நிலையில் தயார் நிலையில் - காத்திருக்கிறோம்.'' - என்றும் அவர் கூறினார்.

எனினும், தலைநகரின் விசேட பாதுகாப்புக்காக வெளியிடங்களில் இருந்து எத்தனை ஆயிரம் பொலிஸாரும் முப்படையினரும் தலைநகருக்குத் தருவிக்கப்பட்டுள்ளார்கள் என்ற புள்ளிவிவரத் தகவலை அவர் வெளியிடவில்லை.

தலைநகருக்கு மேலதிகமாக அழைக்கப்பட்டுள்ள படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோரையும், நாளை காலி முகத்திடல் மைதானத்தில் நடைபெறும் சுதந்திரதின அணி வகுப்பு நிகழ்வுகளில் பங்குபற்றுவோரையும் தங்கவைப்பதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக கொழும்பில் றோயல் கல்லூரி, தேஸ்டன் கல்லூரி, டி. எஸ். சேனாநாயக்கா வித்தியாலயம், மகாநாம வித்தியாலயம் என்பன கடந்த புதன்கிழமை முதல் மூடப்பட்டுள்ளன. நாளை சுதந்திர தினநிகழ்வுகள் முடிவடைந்தபின்னர் நாளை மறுதினம் முதல் இப்பாடசாலைகள் வழமை போல இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## சமஷ்டித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி).

கலாசாரம், சூழல், சமூகம் போன்ற அடிப்படைகளில் மாகாணங்கள் வரையறுக்கப்பட வேண்டும்.

களுத்துறை, கொழும்பு, கம்பஹா, புத்தளம் ஆகிய மாவட்டங்கள் இணைக்கப்பட்டு அது கோட்டை அல்லது சீதாவக்க தேசம் என அழைக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு என்பன இணைக்கப்பட்டு அது ஈழ தேசம் என அழைக்கப்படவேண்டும் - இவ்வாறு லிபறல் கட்சி தனது யோசனையில் தெரிவித்துள்ளது.

இந்த யோசனைகளுக்காக அந்தக் கட்சி இலங்கையின் வரலாறு காலனித்துவம் உட்பட பல அம்சங்களை சுட்டிக்காட்டியுள்ளது. (த)

**கண்ணீர்த் துளிகள்**

சிறுவர் நன்நடத்தை அதிகாரி எஸ்.சிவகரன் அவர்களின் அன்புத் தந்தை ஆறுமுகம் சின்னத்தம்பி அவர்கள் 02.02.2007 அன்று இறைபதம் எய்தியதையிட்டு, கைதடி அரச சிறுவர் இல்ல பொறுப்பாளர்கள், உத்தியோகத்தர்கள், சிறுவர்கள் அன்னாரின் குடும்பத்தினருக்கு தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றனர்.

கைதடி. பொறுப்பாளர், உத்தியோகத்தர்கள், சிறுவர்கள்.
(57737)

**மரண அறிவித்தல்**

**சிவலிங்கம் உதயச்சந்திரன் (சங்கர்)**



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் உதயச்சந்திரன் (சங்கர்) 02.02.2007 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கம் -சரஸ்வதி தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற லிங்கநாதன் மற்றும் அருந்தவச்செல்வியின் அன்பு மருமகனும் அனுஷாவின் அன்புக் கணவரும் துஷாந், துஷியந்தினி, துஷாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரமோகன், சந்திரவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2007) சனிக்கிழமை ந.ப.12மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை மேற்கு, சுன்னாகம். (57735) தகவல், குடும்பத்தினர்.

**பத்திரிகை விநியோகிப்போர் தேவை**

பத்திரிகை விநியோகம் செய்வதற்கு தகுதியானவர்கள் தேவை. மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் அவசியம். ஏற்கனவே இப்பணியில் அனுபவம் உள்ளவர்களுக்கும் மோட்டார், கார் மற்றும் மோட்டார் வாகனம் செலுத்தும் அனுபவமுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பணிக்கு பயிற்சியாளராக கடமையாற்ற விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். தெரிவு செய்யப்படுவோருக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தகுதியானவர்கள் கல்வி மற்றும் சாரதி அனுபவச் சான்றிதழ்களுடன் அலுவலக நேரத்தில் ஆளணி முகாமையாளரைச் சந்திக்கவும்.

561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(அ/51975)

**90 ஆம் நாள் நினைவஞ்சலி**

செல்வன்

**தங்கராஜா துஷியந்தன்**



மண் மகிழ 16.09.1988 கண் நெகிழ 06.11.2006

அம்மா அம்மா என்று என்னை
வாய் நிறையக் கூப்பிடுவாயே!
அப்பா அப்பா என்று கூப்பிட்ட என் குலவிளக்கே!
அண்ணா அண்ணா என்று ஆசைதீர
அழைக்கும் என் அன்புத் தம்பியே!
சின்னவன் சின்னவன் என்று அழைத்து
தித்திப்பு அளித்த என் அருமை அண்ணாவே!
எம்மைத் தனிமரமாய்த் தவிக்கவிட்டுச் சென்றாயே!

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

21, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி. தாய், தந்தை, அண்ணன், தம்பிமார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] ரர் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org